

புரட்சிப் பெரியார் முழக்கம்

திராவிடர் விடுதலைக் கழக வார ஏடு

www.dvkperiyar.com

ஆசிரியர் : விடுதலை இராசேந்திரன் | திருவள்ளுவர் ஆண்டு 2053 | பிப்ரவரி 24, 2022 | புரட்சி 21 | முழக்கம் 06 | விலை: ரூ.3.00


# விடை பெற்றார்; லெனின் சுப்பையா

# உருக்கமும் உணர்வுமாய் நடந்த நினைவேந்தல்

***மக்களிடம் ஜாதி, மதம் பார்ப்பனியத்துக்கு எதிரான பாடல்களை எழுதியும் இசையமைத்தும் தனது ‘விடுதலைக் குரல்’ கலைக்குழு வழியாக போரிசைப் பாடல்களை பாடி வந்த தலித் சுப்பையா, பிப். 16, 2022 அன்று புதுச்சேரியில் முடிவெய்தினார். இறுதி காலத்தில் தலித் சுப்பையா எனும் பெயரை லெனின் சுப்பையா என்று மாற்றிக் கொண்டார்.***

ஜாதிய ஒடுக்குமுறைக்கு உள்ளான தலித் ஏழைக் குடும்பத்தில் மதுரை மாவட்டத்தில் பிறந்த அவர், தடைகளைத் தகர்த்து, கல்வி பயின்று, 1980களில் புதுச்சேரிக்கு குடியேறினார். தொடக்கக் காலத்தில் மார்க்சிய சிந்தனைகளில் ஈடுபாடு கொண்டிருந்தார். அம்பேத்கர் நூற்றாண்டில் அம்பேத்கரிய பெரியாரிய சிந்தனைகளோடு புரட்சிப் பாடகரானார். பல நூறு பாடல்களை எழுதி, அவரே இசை அமைத்தார். தலித் சுப்பையா என்று தன்னை அடையாளப்படுத்தினார். பாடல் வரிகளில் அலங்காரங்கள் அழகுச் சொற்களைத் தவிர்த்து, வரலாறு களையும் சிந்தனைகளையும் பொதித்து வைத்தார். தனது இசை நிகழ்ச்சி மேடைகளை சிந்தனை மேடைகளாக்கினார். பெரியார் திராவிடர் கழகம், பிறகு திராவிடர் விடுதலைக் கழக மேடைகளில் தொடர்ந்து இசை நிகழ்ச்சிகளை நடத்தினார்.

அவர் இறப்பு செய்தி கிடைத்தவுடன் பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன், தென்சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, அவரது குழுவில் பங்கேற்றுப் பாடி வந்த தோழர் நாத்திகன், அருண்குமார் ஆகியோர் புதுவை சென்று இறுதி மரியாதை செலுத்தினர். அதைத் தொடர்ந்து, 18.02.2022 அன்று கழகத் தலைவர் கொளத்தூர் மணி, தலித் சுப்பையாவின் இல்லத்திற்குச் சென்று அவரது குடும்ப உறுப்பினர்களை சந்தித்து ஆறுதல் கூறினார். கடந்த 20.2.2022 அன்று சென்னை தலைமைக் கழக அலுவலகத்தில் அவரது படத் திறப்பு நினைவேந்தல் நிகழ்வையும் திராவிடர் விடுதலைக்கழகம் ஏற்பாடு செய்திருந்தது. அவரது கலைக் குழுவில் 20 ஆண்டுகாலம் தொடர்ந்து பயணித்த பாடகர் மணிமேகலை, அவரது துணைவர் கார்த்திக், நாத்திகன் ஆகியோர் லெனின் சுப்பையாவின் பாடல்களைப் பாடி அவரது மறைவுக்கு இறுதி மரியாதை செலுத்தினர். அவரது குழுவில் தொடர்ந்து பயணித்த கார்த்திக், ஒவ்வொரு பாடலையும் லெனின் சுப்பையா எந்தப் பின்னணியில் எழுதினார், யாருக்காக எழுதினார் என்ற வரலாற்றத் தகவல்களையும் எந்த நேரத்திலும் தனது கலையை விலை பேசாத சமரசமற்ற இலட்சிய உறுதியையும் இணைப்புரையாக ஒவ்வொரு பாடலுக்கும் வழங்கியபோது அவையே கண்ணீர் சிந்தியது. ஒன்றரை மணி நேரம் இசை நிகழ்ச்சி உருக்கத்துடன் பார்வையாளர்கள் இதயங்களில் துயரச் சுமையை அழுத்தியவாறே நடந்தது.




கழகத் தலைவர் கொளத்தூர் மணி, லெனின் சுப்பையா படத்தைத் திறந்து வைத்தார். லெனின் சுப்பையாவுக்கு தொடர்ந்து ஆதரவுக் கரம் நீட்டி, அவருக்கு அனைத்து வகையிலும் உதவி வந்த புதுச்சேரி பெரியார் சிந்தனையாளர் இயக்கத்தைச் சார்ந்த தீனா, திராவிடர் விடுதலைக் கழகத் தலைமை மீது அவர் மிகுந்த நம்பிக்கைக் கொண்டிருந்ததையும் தனது குடும்பத்தைவிட இலட்சியத்தை மிகவும் ஆழமாக நேசித்ததையும் உருக்கமாக எடுத்துச் சொன்னார். தலித் சுப்பையாவின் இரண்டாவது மகன் கார்க்கி, பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரன் ஆகியோர் இரங்கல் உரையாற்றினர்.

17 ஆண்டுகளுக்கு முன்பு, 2005ஆம் ஆண்டு, அக்.2 இல் திருப்பூரில் பெரியார் திராவிடர் கழகம் நடத்திய தமிழர் எழுச்சி விழா மாநாட்டில் இசை நிகழ்ச்சி நடத்திய தலித் சுப்பையா, பாடல்களுக்கான இணைப்புரையாகப் பேசிய கருத்துகளைத் தொகுத்து 27.2.2005 அன்று ‘புரட்சிப் பெரியார் முழக்கம்’ வெளியிட்டிருந்தது. அத் தொகுப்பில் தலித் சுப்பையா பதிவு செய்த கருத்துகளை விடுதலை இராசேந்திரன் எடுத்துக் காட்டி உரையாற்றினார். (அந்த உரையின் சுருக்கம் இந்த இதழில் வெளியிடப்பட்டுள்ளது) தென் சென்னை மாவட்ட செயலாளர் இரா. உமாபதி, தலைமையேற்று நிகழ்வுகளைத் தொகுத்து வழங்கினார். நிகழ்ச்சி உணர்வுடனும் உருக்கத்துடனும நடந்தேறியது.

‘விடுதலைக் குரல்’ கலைக் குழுவை தலித் சுப்பையா பாடல்களுடன் தொடர்ந்து அவரது குழுவில் பயணித்தவர்கள் தொடர்ந்து நடத்த வேண்டும் என்று நிகழ்வில் பேசியவர்கள் வலியுறுத்தினார்கள்.

# “வரலாற்றின் போக்கைத் திருப்பியவர் பெரியார்”

திருப்பூர் தமிழர் எழுச்சி விழாவில் அக்.2, 2005 அன்று காலை-மாலை நிகழ்ச்சிகளில் தலித் சுப்பையா குழுவினரின் ‘விடுதலைக் குரல்’ எழுச்சி இசை நிகழ்ச்சி நடைபெற்றது. இசை நிகழ்ச்சியில் பாடல்களுக்கிடையே தோழர் தலித் சுப்பையா, அறிவார்ந்த சிந்தனைகளை முன் வைத்தார். அவர் பேசியவைகளிலிருந்து ஒரு தொகுப்பு.



தோழர்களே! பெரியார் மரணமடைந்தபோது அதற்கு, தமிழ்நாட்டில் இரங்கல் தெரிவிக்காத அமைப்புகள் இரண்டு. ஒன்று சங்கர மடம்; மற்றொன்று அகில இந்திய பார்வர்டு பிளாக். சங்கரமடம், நமது இன எதிரி. எனவே அது இரங்கல் தெரிவிக்காதது வியப்பு அல்ல. ஆனால் நமது மண்ணின் மைந்தர்களான கள்ளர், தேவர், மறவர் சமூகத்தினர் ஏன் இரங்கல் தெரிவிக்கவில்லை? இதற்கான வரலாற்றுக் காரணத்தை நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

1957இல் முதுகளத்தூரில் நடந்த கலவரத்தில் நூற்றுக்கணக்கான சேரிகள் எரிக்கப்பட்டன. அது ஒரு சாதிப் போர். அப்போது முதல்வராக இருந்தவர் பெரியவர் காமராசர். மாபெரும் மனிதர். எங்களுடைய கல்விக்கு அவர்தான் அடித்தளமிட்டவர். சாதிக் கலவரத்தை நடத்துவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று பெரியார் வைத்த கோரிக்கையை ஏற்று, காமராசர் கடும் நடவடிக்கையை எடுத்தார். அதனால்தான் காமராசர் இறந்த போது, மதுரை, கம்பம், உசிலம்பட்டி, தேனி பகுதிகளில், ஆடு வெட்டி பூசை செய்து, தீபாவளி கொண்டாடினார்கள். காமராசர் எடுத்த கடும் நடவடிக்கை களுக்காக, தங்கள் எதிர்ப்பைக் காட்டினார்கள். நான் பிறந்த கிராமம் சிவகங்கை படமாத்தூர் அருகே உள்ள நாட்டார்குடி, முதுகளத்தூர் கலவரத்தின் போது கிராமத்தில் வாழ முடியாமல், மதுரைக்கு இடம் பெயர்ந்து, குடி புகுந்த குடும்பம் என் குடும்பம். எனவே தான் இந்த வரலாறு எனக்குத் தெரியும்.

இன்றைக்குப் பெரியாரைக் குறைகூறும் ‘தலித்’களுக்கு, இந்த வரலாறு தெரியுமா? இப்படிக் குறை கூறுகிறவர்கள் எல்லாம் வடமாவட்டங்களில் பிறந்த வயது குறைந்தவர்கள். இந்த வரலாறுகள் பதிவு செய்யப்படாத காரணத்தால், இவர்கள் எல்லாம், பெரியாரைக் குறை கூறுகிறார்கள்.

பெரியார் நாடகம் பார்த்தீர்களா? என்று ஒரு வாசகர் கேட்ட கேள்விக்கு, ஒருவர் பதில் எழுதுகிறார், “40 வருடமாக அந்த நாடகம் தானே நடந்து கொண்டிருக்கிறது” என்று. நான் மிகவும் வருத்தப்பட்டேன்.

பெரியார் நாடகமாக இருக்கலாம்; ஏன், அது வரலாற்று நாடகம்! ஒரு வரலாற்றை நாடகமாக்கியிருக்கிறார்கள். அதுதான் உண்மை. பொறுப்பில்லாமல் பேசக் கூடாது. பெரியார் எங்கேயாவது, வன்னியர்களுக்குத் தலைவர், செட்டியார்களுக்குத் தலைவர் என்று எந்தச் சாதிக்காவது தலைவர் என்று உங்களால் அடையாளம் காட்ட முடியுமா? வ.உ.சிதம்பரனாரை சாதித் தலைவராக்குகிறார்கள்; காமராசரை சாதித் தலைவர் களாக்குகிறார்கள்; பெரியாரை அப்படி நீங்கள் காட்ட முடியுமா?

ஒருவர் எழுதுகிறார் பெரியாரை, ‘இரவல் சிந்தனையாளர்’ என்று. தோழர்களே! நான் ஒரு மாதத்துக்கு 18 தமிழ்ப் பத்திரிகைகளையும், 6 ஆங்கிலப் பத்திரிகைகளையும் வாசிக்கிறேன். ஆனால் ஒரு காலத்தில் நான் பிறர் படிக்கக் கேட்ட சமூகம். பிறர் பாடக் கேட்ட சமூகம். இன்று நாங்கள் பாடுகிறோம், சமூகம் கேட்கிறது. இதற்கு அடித்தள மிட்டவர் யார்? தமிழ்நாட்டில், அம்பேத்கர் நூற்றாண்டுக்குப் பிறகு, தலித் இயக்கங்கள் அம்பேத்கரை அறிமுகப்படுத்தின. ஆனால் அதற்கு முன்பே, தமிழ்நாட்டில் அம்பேத்கரை அறிமுகப்படுத்தியது யார்? பெரியார். அம்பேத்கரின் ‘சாதியை ஒழிக்க வழி’ நூலை தமிழில் அச்சிட்டு, மக்களிடையே பரப்பியவர் யார்? பெரியார்!

ஆனால் பெரிய பொறுப்பில் உள்ளவர்களே பொறுப்பில்லாமல் பெரியாரை குறை கூறுகிறார்கள். தமிழ்ச் சமூக மரபில் அடித்தட்டு மக்கள். தாழ்த்தப்பட்ட மக்கள், பார்ப்பனர்களுக்கு எதிராக ஒரு யுத்தம் நடத்துகிறபோது, ஆயுதம் எடுத்துப் போராடுகிற மக்களாக இருப்பவர்கள் தாழ்த்தப்பட்ட மக்கள். அவர்களை சக பாட்டாளி மக்களிடமிருந்து பிரித்தெடுப்பதற்கான அவசியமென்ன? சிந்தித்துப் பாருங்கள்!

- அமெரிக்காவைச் சார்ந்த பெவர்லி நிக்கலஸ் என்ற ஆராய்ச்சியாளர் 6 மாத காலம் இந்தியா முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டு, ‘இந்தியாவைப் பற்றிய ஒரு தீர்ப்பு’ எனும் நூலை எழுதினார். அதில், ஒவ்வொரு மாநிலத்தவரும் வங்காளி, மலையாளி, தெலுங்கர் என்றும், மாநிலங்களுக்குள்ளே போனால், ரெட்டியார், முதலியார் என்றும், ஒவ்வொருவரும் கூறுகிறார்களே தவிர, தன்னை இந்தியர் என்று ஒருவர்கூட கூறவில்லை என்று எழுதினார். அதைத் தான் பெரியார் இந்தியா என்பது ஒரு கற்பனை என்றார். நாம் அதைத் தான் இந்தப் பாடல் மூலம் கேட்கிறோம்.

*சாதிகளாய் பிரிந்திருப்பது நியாயமா? தமிழ்*
*சனங்களாகச் சேருவது என்ன பாவமா?*
*இந்துவாக இருப்பது என்ன மோகமோ? - இந்த*
*இழிவைச் சுமக்க எத்தனை காலம் வேணுமோ!*

- தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் ஆற்றல்மிகு செயல்வீரர் பத்ரி நாராயணன், அவர் கொல்லப்பட்டார் என்ற செய்தியை ஒரு நாள் பத்திரிகையில் படித்தபோது நான் கலங்கிப் போனேன். மூடநம்பிக்கைகளுக்கு எதிராக இறுதிவரைப் போராடிய தோழர் பத்ரி நினைவுக்காக இந்தப் பாடலை, புதுவையில்

(4ஆம் பக்கம்)

## பங்கு சந்தையில் பார்ப்பனர்கள் கொட்டம் : ‘ரிக்-யஜுர்-சாம@அவுட்லுக்.டாட்.காம்’

*பங்கு சந்தையில் பார்ப்பனர்கள் அடித்த கொட்டம் – வெளிச்சத்துக்கு வந்துள்ளது.*



தேசிய பங்குச் சந்தையின் முன்னாள் நிர்வாக இயக்குநர் சித்ரா ராமகிருஷ்ணன், சாமியாரின் வழிகாட்டல்களை பெற்று செயல்பட்டதில் புதிய திருப்பமாக சித்ரா ராமகிருஷ்ணனை ஆட்டுவித்தது சாமியாரா? அல்லது அவரைப் பற்றி நன்கு அறிந்த ஆசாமியா? என்று கேள்வி எழுந்துள்ளது. சித்ரா ராமகிருஷ்ணனின் கூந்தல் அழகை வர்ணித்தும், அவரை சிசெல்ஸ் தீவுக்கு செல்லலாம் என்றும் அழைப்பு விடுத்தும் சாமியாரின் பெயரில் அனுப்பப்பட்ட மின்னஞ்சல்கள் புதிய சர்ச்சைக்கு வித்திட்டுள்ளது.

வடிவேலுவின் காமெடி காட்சியை மிஞ்சும் வகையில் இந்தியாவின் மிகப்பெரிய பங்குச்சந்தையான தேசிய பங்குச்சந்தையில் அரங்கேறிய காமெடி கலந்த மோசடியே பொருளாதார வட்டாரத்தில் முக்கிய விவாதப் பொருளாக உள்ளது. rigyayursama@outlook.com (ரிக்யஜுர்சாம@அவுட்லுக்.காம்) என்ற மின்னஞ்சல் முகவரியில் இருந்து சிரோன்மணி என்ற சாமியார் அனுப்பியதாக கூறப்படும் மின்னஞ்சல் பரிந்துரைகளை நம்பி தேசிய பங்குச்சந்தையில், பங்குச் சந்தை அனுபவமே இல்லாத ஒருவருக்கு பதவிகளையும், பணத்தையும் வாரியிறைத்துள்ளார் அந்த பங்குச்சந்தையின் முன்னாள் தலைவரான சித்ரா ராமகிருஷ்ணன். சட்டத்தை மீறி பங்குச்சந்தையின் முக்கிய முடிவுகளை வெளி நபரான சாமியார் என்று கூறப்படும் அந்த நபருடன் பகிர்ந்து கொண்டதோடு நிற்காமல், அவர் பரிந்துரைப்படி, எவ்வித விதிகளையும் பின்பற்றாமல், கண்மூடித்தனமாக ஆனந்த் சுப்ரமணியன் என்பவரை 2013 ஆம் ஆண்டில் தேசிய பங்குச் சந்தையின் முதன்மை ஆலோசகராக நியமித்துள்ளார் சித்ரா ராமகிருஷ்ணன்.

பால்மர் என்ற நிறுவனத்தில் ஆண்டுக்கு பதினைந்து லட்சம் ரூபாய் ஊதியம் வாங்கிக்கொண்டு இருந்த ஆனந்த் சுப்ரமணியன், தேசிய பங்குச்சந்தையில் ஒரு கோடியே 68 லட்சம் ரூபாய் ஊதியத்தில் 2013ஆம் ஆண்டு பணியமர்த்தப்பட்டார். அடுத்த 3 ஆண்டுகளில் இவரின் ஊதியம் 5 கோடி ரூபாயை தாண்டிவிட்டது. எல்லோருக்கும் 5 நாள் வேலை என்றால், ஆனந்த் சுப்ரமணியனுக்கு மட்டும் 3 நாள்தான் வேலை. அதுவும் பங்குச் சந்தை தலைவராக இருந்த சித்ரா ராமகிருஷ்ணனின் அறையின் அருகிலேயே தனியறை வசதியுடன் விரும்பும் நேரத்துக்கு அலுவலகத்துக்கு வந்து செல்லவும் அனுமதிக்கப்பட்டுள்ளார் ஆனந்த் சுப்ரமணியன். உலகம் முழுவதும் விமானத்தில் முதல் வகுப்பில் பயணிக்கும் சிறப்பு வசதியை ஆனந்த் சுப்ரமணியனுக்கு சித்ரா ராமகிருஷ்ணன் ஏற்படுத்திக் கொடுத்திருந்ததால் வாரந்தோறும் சென்னை வந்து சென்றுள்ளார் ஆனந்த்.

சாமியார் அனுப்பிய மின்னஞ்சலை நம்பி ஆனந்த் சுப்ரமணியனுக்கு ஏராளமான வசதிகளை செய்து கொடுத்ததோடு நிற்காமல், நிர்வாகம் சார்ந்த பல முக்கிய முடிவுகளை எடுத்ததையும் ஒப்புக்கொண்டுள்ளார் சித்ரா. குறிப்பாக கோ லொக்கேஷன் எனப்படும் பங்குச்சந்தை பரிவர்த்தனை தகவல்களையும் சாமியார் மற்றும் அவர் கூறிய சில நிறுவனங்களுக்கு சித்ரா முன்கூட்டியே பகிர்ந்து கொண்டதாகவும் புகார் எழுந்ததன் காரணமாகவே பதவிக்காலம் முடியும் முன்பே அவர் பங்குச் சந்தை தலைவர் பதவியில் இருந்து 2016ஆம் ஆண்டு விலகியதாகவும் செபி சந்தேகம் தெரிவித்துள்ளது. சித்ராவின் செயல்பாடு பங்குச் சந்தை விதிகளுக்கு எதிரானது என்று கூறி அவருக்கு 3 கோடி அபராதம் விதிக்கப்பட்டாலும், இதுகுறித்து கூடுதல் விசாரணை நடத்த வேண்டியது அவசியம் என்பதை செபி வெளியிட்ட உத்தரவில் உள்ள தகவல்கள் காட்டுகின்றன.

குறிப்பாக 2015ஆம் ஆண்டு சாமியார் என்ற பெயரில் சித்ரா ராமகிருஷ்ணனுக்கு மின்னஞ்சல் அனுப்பிய அந்த நபர், இன்று நீங்கள் அழகாக இருக்கிறீர்கள், உங்களின் கூந்தல் உங்கள் தோற்றத்தை கவர்ச்சிகரமாக எடுத்துக்காட்டுகிறது என்றெல்லாம் வர்ணித்துள்ளார். கூந்தல் பரமாரிப்புக்காக சில டிப்ஸ்களையும் வழங்கிய சாமியார், இதனை நீங்கள் ஏற்றுக்கொள்வீர்கள் என்றும் நம்பிக்கை தெரிவித்துள்ளார். அத்தோடு, தமிழில் கிருஷ்ணரை புகழ்ந்து பாடும் ’மகர குண்டலம்’ பாடலை அனுப்பிய சாமியார், பாடலை கேட்டீர்களா? என்று மற்றொரு மின்னஞ்சலில் கேள்வி எழுப்பியுள்ளார்.

மற்றொரு மின்னஞ்சலில் உங்களோடு நேற்று நான் இருந்த நேரம் மிகுந்த மகிழ்ச்சியை அளிக்கிறது. உங்களுக்காக நீங்கள் செய்த இந்த சிறிய விஷயங்கள் உங்களை இளமையாகவும், சுறுசுறுப்பாகவும் உணரவைக்கும் என சித்ரா ராமகிருஷ்ணன் வெட்கப்படும் அளவுக்கு வர்ணத்து தள்ளியிருக்கிறார். 2015 மார்ச் மாதத்தில் கொஞ்சம் நேரம் ஒதுக்கி வையுங்கள் என சித்ரா ராமகிருஷ்ணனிடம் கேட்டிருக்கும் சாமியார், மற்றொரு இ-மெயிலில், தான் அடுத்த மாதம் சீஷெல்ஸ் செல்ல திட்டமிட்டுள்ளதாகவும், நீங்களும் பயணத்துக்கு தயாராகுங்கள் என்று அழைப்பு விடுத்துள்ளார். அதனை ஏற்றுக் கொண்டு தனது உதவியாளர் மூலம் பதில் மின்னஞ்சலும் அனுப்பியுள்ளார் சித்ரா. பயணத் திட்டம் பற்றியும் இருவரிடையே தகவல் பரிமாற்றம் நடந்துள்ளது.

கிழக்கு ஆப்ரிக்காவில் இருக்கும் அந்த அழகான தீவுக்கு சென்று இருவரும் கடலில் குளிக்கலாம், கடற்கரையில் ஓய்வெடுக்கலாம்... உங்களுக்கு நீச்சல் தெரியுமா என்றெல்லாம் உருகி உருகி இ-மெயில் தட்டியிருக்கிறார் அந்த பெயர் தெரியாத சாமியார். சீஷெல்ஸ் தீவுக்கு ஹாங்காங் வழியாக செல்ல வேண்டுமென்பது தனது விருப்பம் அல்லது சிங்கப்பூர் வழியாக கூட செல்லலாம், உங்களுக்கு தேவையானவற்றை சேசு செய்வார் என்றும் பயணத்திட்டங்களை வகுத்திருக்கிறார் சாமியார். அழகு வர்ணிப்பு, வெளிநாட்டுப் பயணத் திட்டம் போன்றவற்றோடு நிற்காமல் பங்குச் சந்தை இயக்குனர்களாக யார் யாரை நியமிக்கலாம் என்பது குறித்தெல்லாம் ஆலோசனை வழங்கியுள்ளார் சாமியார்.

மேலும் சாமியார் பெயரில் வந்த மின்னஞ்சல்கள் மூலம், அவர் பங்குச் சந்தை மட்டுமின்றி டெல்லி அரசியல் வட்டாரத்திலும் முக்கிய நபர்களுடன் தொடர்பில் இருந்தது தெரியவந்துள்ளது. முறைகேடுகளை கண்டறியக்கூடாது என்பதற்காகவே இ வேஸ்ட் என்ற பெயரில் சித்ரா ராமகிருஷ்ணன் மற்றும் ஆனந்த் சுப்ரமணியன் ஆகியோரது மடிக் கணினிகள் அழிக்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. இதனால், சாமியார் போர்வையில் சித்ரா ராமகிருஷ்ணனை ஆட்டுவித்தது, அவரை நன்கு அறிந்த ஒரு நபராக இருக்கலாம் என்று சந்தேகம் எழுந்துள்ளது.

**‘செபி’ அமைப்பு ‘அந்த சாமியார்’ என்பதே கற்பனை கதாபாத்திரம்; அந்த நபரே ஆனந்த் சுப்ரமணியம் தான் என்கிறது. சாமியார் ‘ஆன்மீக சக்தி’ உள்ளவர். காட்டுக்குள்ளிருந்து கொண்டு இணைய தொடர்புகள் ஏதுமின்றியே மின்னஞ்சல் செய்யும் ஆன்மீக பலம் பெற்றவர் என்கிறார் சித்ரா. அவாள்கள் எப்படி வேண்டுமானாலும் காதில் பூ சுற்றுவார்கள். வழக்கு மதுரை நீதிமன்றத்துக்கு வந்தால் சாமியார்களுக்கு அப்படிப்பட்ட ஆன்மீக சக்திகள் இருப்பதை ஏற்றுக் கொள்ள வேண்டும். அந்த காலத்திலேயே திகம்பர சாமியார் சினிமாவில் இது விளக்கப்பட்டுள்ளது என்று தீர்ப்புகள் வந்தாலும் வியப்பதற்கு இல்லை.**

**– புரட்சிப் பெரியார் முழக்கம் 24.02.2022**

## தில்லை தீட்சதர்கள் 20 பேர் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டம் பாய்ந்தது

சிதம்பரம் நடராஜர் கோவிலில் 20 தீட்சதர்கள் மீது வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. இது வரவேற்கத்தக்க ஒரு நடவடிக்கை. நடராஜர் கோவிலில் உள்ள சிற்றம்பல மேடை மீது ஜெயசீலா என்ற 37 வயது பெண் பக்தை - அவர் தலித் சமூகத்தை சேர்ந்தவர் சாமி தரிசனம் செய்திருக்கிறார். அவரை சிற்றம்பல மேடையில் ஏறக்கூடாது என்று தடுத்து கொடூரமாக தீட்சதர்கள் தாக்கியிருக்கிறார்கள். அவர் கொடுத்த புகாரின் அடிப்படையில், வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் தீட்சிதர்கள் மேல் வழக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது.

கோவில்களை அரசுப் பிடியில் இருந்து விடுவித்து தனியாரிடம் ஒப்படைக்க வேண்டும் என்று பாரதிய ஜனதா கட்சிக்காரர்களும், ஆர்.எஸ்.எஸ்.காரர்களும் தொடர்ச்சியாக போராடிக் கொண்டிருக் கிறார்கள். தில்லை நடராஜர் கோவில் தற்போது தீட்சிதர்கள் கட்டுப்பாட்டில் தான் உள்ளது. அறநிலையத்துறை கட்டுப்பாட்டின் கீழ் இல்லை. ஆனால் தீட்சிதர்களுக்குள்ளேயே இரண்டு பிரிவுகளாகப் பிரிந்து பக்தர்கள் காணிக்கைகளை கொள்ளையடிப்பதிலும் பங்கு போடுவதற்கும் ஒருவரை ஒருவர் தாக்கிக் கொள்வதும் இரத்தம் சிந்துவதும் தொடர்ச்சியாக நடந்து கொண்டு தான் இருக்கிறது. அங்கே தேவாரம், திருவாசகம் போன்ற பாடல்களைப் பாடக்கூடாது என்று சண்டித்தனம் செய்து வன்முறையிலே தீட்சிதர்கள் இறங்கிய வரலாறுகளும் உண்டு. ஆறுமுக நாவலர்என்ற பெரியவர் இதற்காக நீண்ட நெடிய போராட்டத்தை நடத்தி இறுதியில் அவர் மரணமும் அடைந்து விட்டார்.

கோவில்கள் பார்ப்பனர்கள் பிடியில் இருக்கும் என்று சொன்னால் எப்படி இருக்கும் என்பதற்கு தில்லை தீட்சிதர்கள் கோவிலைத் தவிர வேறு உதாரணம் இல்லை. சில காலம் அரசாங்கத்தினுடைய கட்டுப்பாட்டில் இந்த கோவில் இருந்தபோது கிடைத்து வந்த உண்டியல் வருமானத் தொகை, தீட்சிதர்கள் கட்டுப்பாட்டிற்கு வந்ததற்குப் பிறகு மிகப் பெருமளவிற்கு குறைந்து விட்டது. காரணம், உண்டியல் பணத்தை தங்களது சொந்தப் பணம் போன்று தீட்சிதர்கள் கொள்ளையடித்துக் கொள்வது தான் காரணம். தமிழ்நாட்டில் மதமாற்றம் நடக்கிறது. சி.பி.அய் விசாரணை வேண்டும் என்று கேட்கிற அளவிற்கு ஆகாயத்திற்கும், பூமிக்கும் துள்ளிக் குதித்துக் கொண்டிருக்கும் சங்கிகளும், பாஜகவினரும், ‘இந்து’ மதத்தைச் சேர்ந்த ஒரு பெண் பக்தை சிற்றம்பல மேடையில் நின்று சாமி தரிசனம் செய்யக்கூடாது என்று தீட்சத பார்ப்பனர்கள் எதிர்ப்பதும், அந்தப் பெண்ணை தாக்குவதும் போன்ற தீண்டாமை வெறியில் செயல்படுவதை கண்டிப்பதற்கு தயாராக இல்லை.

மதமாற்றம் கூடாது, இந்து மதத்தில் தான் இருக்க வேண்டும் என்கிறார்கள். ஆனால் இந்து மதத்தின் நாற்றம் இப்படி தீண்டாமை வெறியாக மாறிப்போய் வீசிக் கொண்டிருப்பதை ஏன் இவர்கள் கண்டிக்க மறுக்கிறார்கள்?


கோவில்களை அரசுக் கட்டுப்பாட்டில் இருந்து விடுவிக்க வேண்டும் என்று கூறுகிறவர்கள், அரசுக் கட்டுப்பாட்டில் இல்லாத கோவில்களின் யோக்கியதை இப்படி இருக்கிறது என்று ஏன் கேட்க தயங்குகிறார்கள்? பாஜகவின் அஜெண்டா என்பது பார்ப்பன மேலாதிக்கத்தை நிலை நிறுத்து வது என்பது தான். மதமாற்றமோ, கோவில்களை அரசுப் பிடியில் இருந்து விடுவிப்பதோ இல்லை என்பதே இதிலிருந்து நாம் புரிந்து கொள்ள வேண்டியது.

### நன்கொடை



தென் சென்னை மாவட்ட செயலாளர் உமாபதி பிறந்தநாள் நிகழ்வில், 17.2.2022 அன்று ‘புரட்சிப் பெரியார் முழக்க’த்திற்கு 50 சந்தாக்களுக்கான தொகை ரூ.12500/-ஐ கழக பொதுச் செயலாளர் விடுதலை இராசேந்திரனிடம், திருவல்லிக்கேணி பகுதி தோழர்கள் வழங்கினர்.

### தமிழில் பெயர்கள்



2000, 3000 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட நூல்களில் மதம் அதிகம் இருக்காது. அதுபோலவே தமிழர்களின் சரித்திரப் பெயர்களை எடுத்துப் பார்த்தால் அதிலே மதக் கடவுள் சார்புப் பெயர்கள் அதிகம் இல்லை. சேர சோழ பாண்டியர்கள் என்பவர்களான முற்பட்ட மூவேந்தர் களிலும் மதப் பெயர்கள் அதிகம் இல்லை. நாளாக ஆக மத ஆதிக்கம் குறைந்துவிட்டது.

மேல்சாதியினர் இராமன், கிருஷ்ணன், இலட்சுமி, பார்வதி என்று வைத்துக் கொண்டனர். கீழ்சாதியினர் கருப்பன், மூக்கன், வீரன், கருப்பாயி, காட்டேரி, பாவாயி, என வைத்துக் கொண்டனர். கீழ் சாதியினர் சாமி, அப்பன் என்ற பெயரை வைக்கக் கூடாது என்று அந்தக் காலத்தில் சொல்லப்பட்டது. சாமி, அப்பன் என்று கீழ் சாதியினர் பெயர் சூட்டினால், அவரை உயர்சாதியினர் சாமி என்று அழைக்க வேண்டி வரும், அதனால் அப்படிச் சென்னார்கள். அதை மீறி இராமசாமி, கந்தசாமி என்று யாராவது பெயர் வைத்திருந்தால் அவரை ராமா, கந்தா என்று அழைத்தார்கள்.

**விடுதலை 24.03.1953**

# தமிழை இலக்கியத்துக்காக அல்ல, தமிழர்களுக்காக தாங்கிப் பிடித்தவர் பெரியார் (2)

*ப. திருமாவேலன், ‘இவர்தமிழர் இல்லை என்றால் எவர் தமிழர்?’ – தொகுப்பு நூல் குறித்த ஒரு பார்வை.*

**விடுதலை இராசேந்திரன்**

நான்காவது அத்தியாயம் - பெரியாருடன் இணைந்து பணியாற்றிய 50 புலவர்களுடன் பெரியாருக்கு இருந்த நெருக்கமான உறவுகளை விரிவாக அலசுகிறது.

அண்ணாமலைப் பல்கலைக்கழகப் பேராசிரியராக இருந்த கா. சுப்பிரமணிய பிள்ளை (கா.சு.பிள்ளை) மிகச் சிறந்த தமிழ் அறிஞர்; சட்டம் படித்தவர். நீதிபதி பதவிக்கு தகுதியிருந்தும் நீதிக்கட்சியில் ஈடுபாடு காட்டியதால் பதவி கிடைக்கவில்லை. தீவிர சிவபக்தர். கடைசி மூச்சு நிற்கும் வரை தினந்தோறும் மணிக்கணக்கில் சிவபூஜை செய்தவர். இறை நம்பிக்கையற்ற பெரியார், அவரைத் தமிழர் என்பதற்காக போற்றினார். இறுதி காலத்தில் பக்கவாத நோய்க்கு உள்ளாகி துன்புற்ற போது பெரியார் மாதந்தோறும் 50 ரூபாய் பணம் அனுப்பி உதவினார். இறை மறுப்புக் கொள்கை உடைய பெரியார் தானே உதவ முன் வந்தார் என்று உருக்கமாக எழுதுகிறார், மறைமலை அடிகளாரின் மகன் மறை திருநாவுக்கரசு.


கம்ப ராமாயணத்தை தீவிரமாக ஆதரித்தவர் டி.கே. சிதம்பரநாதன் (டி.கே.சி.); அதைக் கொளுத்தச் சொன்னவர் பெரியார்; ஆனாலும் இருவரிடமும் நல்ல உறவு இருந்தது. ஒரு நாள் குற்றால மலைச் சாரலில் நண்பர்களுடன் இலக்கியம் பேசிக் கொண்டிருந்த டி.கே.சி.யின் வீட்டுக்கு வருகிறார் பெரியார். பெரியாருக்கு குறள் குறித்து சில விளக்கங்களைத் தருகிறார். பெரியார் அதைக் கேட்டு, “உங்களைப் போல எந்தப் புலவரும் தெளிவாக விளக்கம் சொல்வதில்லையே” என்ற பெரியாரிடம், “நீங்கள் ஒரு இலட்சியத்தில் நின்று உழைக்கிறீர்கள், அதனால் விளங்குகிறது; ஏமாற்றிப் பிழைப்பவர் களுக்கும் சோம்பேறிப் பயல்களுக்கும் குறள் விளங்காது. உங்களிடம் இலட்சியம் இருக்கிறது; உண்மை இருக்கிறது; செயல் வடிவம் இருக்கிறது; எனவே குறள் விளங்குகிறது” என்கிறார். டி.கே.சி.யின் அறுபதாவது பிறந்த நாள் (சஷ்டியப்பூர்த்தி) இலஞ்சி குமாரரர் முருகன் கோயிலில் நடந்தது. கோயிலில் விழா நடப்பதால் போக வேண்டாம் என்று பெரியாரிடம் சொன்னார்கள். “அறுபதாம் கல்யாணம் டி.கே.சி.க்குத் தான் நடக்கிறதே தவிர, முருகனுக்கா நடக்கிறது?” என்று கேட்டுவிட்டுக் கோயிலுக்குள் போனார் பெரியார்.

தாழ்த்தப்பட்ட சமுதாயத்தைச் சார்ந்த சகஜானந்தா 17 வயதில் துறவறம் பூண்டவர் தீண்டாமை ஒழிப்புக்கு ஒழுக்கத்தையும் தூய்மை யையும் தீண்டப்படாதவர்கள் கடைபிடிக்க வேண்டும் என்று பேசியவர். சிவப்பிரகாச முனிவரின் சீடர்; வ.உ.சி.யின் மாணவர். இவரது கொள்கையை கடுமையாக விமர்சித்தவர் பெரியார். ஆனாலும் அவரது தாழ்த்தப்பட்ட சமுதாயத் தொண்டுக்கு துணையாக இருந்ததோடு அவரது உரைகளை ‘குடிஅரசு’ இதழில் வெளியிட்டார். இவர் உருவாக்கிய சிதம்பரம் நந்தனார் கல்விக் கழகத்துக்கு அரசு நிதி நிறுத்தப்பட்டதை பெரியார் கண்டித்தார். “நூலகங்களில் கறுப்புச் சட்டைக்காரர்களின் நூல்களை வைத்து விடாதீர்கள்” என்று சட்ட மன்றத்தில் பேசியவர் சகஜானந்தா. அதற்காக அவர் மீது பகைமை காட்டவில்லை. அவர் மறைந்த போது அவரது கல்வித் தொண்டுகளைப் பாராட்டி எழுதினார் பெரியார். திராவிடர் கழகத் தோழர்கள் அவரது ‘ஆன்மீக’ உடலுடன் இடுகாடு வரை நடந்து சென்று மரியாதை செலுத்தினர்.

சகஜானந்தரின் எழுத்து பேச்சுகளைத் தொகுத்து வெளியிட்ட பூவிழியன், பெரியாரின் பாராட்டுரை களையும் இணைத்துள்ளார். ஆன்மீகத்தில் சைவத்தில் மூழ்கிய ஞானியார் அடிகள், மறைமலையடிகள், குன்றக்குடி அடிகளாருடன் பெரியார் நட்பு பாராட்டினார். அந்தப் பட்டியலில் சகஜானந்தரும் ஒருவர்.

தேவநேயப் பாவாணருக்கு ‘திராவிட மொழி ஞாயிறு’ என்ற பட்டத்தைத் தந்தவர் பெரியார். ஆனால், பிறகு சில தமிழ்த் தேசியர்கள் நேர்மையின்றி ‘திராவிட’ என்ற வார்த்தையை அகற்றி மொழி ஞாயிறு என்று மட்டும் பாவாணரை விளிக்கத் தொடங்கி விட்டார்கள். அவர் எழுதிய ஒப்பியன் மொழி நூலை பெரியாரே எடுத்துச் சென்று தனது கூட்டங்களில் மக்களிடம் விற்பனை செய்தார்.

நான்காவது அத்தியாயத்தில், பெரியாரின் ‘மொழி’ குறித்த கருத்துகள் அவரது உரையிலிருந்தே மேற்கோள்களாக எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. மனிதனின் முன்னேற்றத்துக்கு மொழியும் ஒரு கருவி




- **தன்னுடன் கருத்து முரண்பட்ட சகஜானந்தா, டி.கே. சிதம்பரனார் போன்ற அறிஞர்களுடன் நட்பு பாராட்டி உரையாடினார் பெரியார்.**
- **தீவிர சிவபக்தர் ‘கா.சு.’ பிள்ளை இறுதிக் காலத்தில் மாதந்தோறும் பணம் அனுப்பி உதவினார் பெரியார்.**
- **தேவநேயப் பாவாணரின் நூலை சுமந்து சென்று கூட்டங்களில் விற்றார். திராவிட மொழி ஞாயிறு என்ற பட்டத்தை வழங்கி யவர் பெரியார். சில தமிழ் தேசியர்கள் திராவிடம் என்ற சொல்லை தாங்களாகவே நீக்கி ‘மொழி ஞாயிறு’ என்று சுருக்கி விட்டனர்.**

தான் என்று நினைத்தவர் பெரியார். ஆனால் மொழியை தமது அரசியல் எதிரி, அரசியல் ஆயுதமாகப் பயன்படுத்தும்போது அவரும் மொழியையே அரசியல் ஆயுதமாகப் பயன் படுத்தினார். அவர் தமிழை இலக்கியத்துக்காக அல்ல; தமிழர்களுக்காகத் தாங்கி நின்றவர். அதனால் தான் அவர் மொழி குறித்தும் தமிழ் மொழி குறித்தும் சொன்னவை அழுத்தமானவை.

தமிழன் கோயிலில் உள்ள கடவுள் என்பவை களுக்குத் தமிழில் பூசை செய்யப்பட வேண்டும். தமிழ்நாட்டில் தமிழன் கோயிலுக்கு தமிழரால் பூசை செய்யப்படவேண்டும். இந்த இரண்டு காரியமும் கடவுளையும் வழிபாட்டையும் பற்றியது மாத்திரமல்ல; தமிழ் மொழியின் தன்மானத்தையும் தமிழனின் தன்மானத்தையும் பற்றியதாகும். (‘விடுதலை’ 7.11.1957)

தமிழில் ஆரியம் புகுந்ததால் தான் மற்ற மக்களெல்லாம் காட்டுமிராண்டிகளாக வாழ்ந்த காலத்தில் கப்பலோட்டி வாணிகம் நடத்திய தமிழ் மரபில், இன்று ஒரு நியூட்டன் தோன்ற முடிய வில்லை. ஒரு எடிசன் தோன்ற முடியவில்லை. ஒரு மார்க்கோனி தோன்ற முடியவில்லை என்பதை அறிந்து கொள்ள வேண்டும். பழமையில் உள்ள மோகத்தை முதலில் விட்டொழிக்க வேண்டும். தமிழைப் புது மொழியாக்கச் சகல முயற்சிகளும் எடுத்துக் கொள்ள வேண்டும். (மொழி - எழுத்து நூல்)

**தமிழ் மொழி குறித்து பெரியார் எழுதிய, பேசிய 178 கட்டுரைகளை தேதி வாரியாகப் பட்டியலிட் டுள்ளார் நூலாசிரியர்.**

தமிழ் மொழிக்காக பெரியார் முன்னெடுத்த களங்கள், கருத்துப் போர்களை முழுமையான தொகுப்பாகி, பெரியார் தமிழுக்கு ‘எதிரானவர்’ என்று உள்நோக்கத்தோடு சுமத்தப்படும் குற்றச் சாட்டுகளை தகர்த்து தூள்தூளாக்கியிருக்கிறது இந்த அத்தியாயம்.

நான்காவது அத்தியாயம் - இந்தி எதிர்ப்புப் போராட்டக்களம் குறித்தும், 5ஆவது அத்தியாயம் 1965 இந்தி எதிர்ப்புப் போரில் பெரியார் எடுத்த நிலைப்பாட்டையும் பெரியார் கருத்துகளோடும் வரலாற்றுத் தகவல்களோடும் விவரிக்கிறது. 1965 போராட்ட வீச்சைக் கண்டு அண்ணா பயந்து போராட்டத்தைக் கைவிட்டார் என்று பெ. மணியரசன் போன்றோர் வைக்கும் குற்றச் சாட்டுகள் அழுத்தமான சான்றுகளோடு மறுக்கப் பட்டுள்ளன.

பெரியார் சமூக முன்னேற்றம் என்ற கண்ணோட் டத்தில்தான் ஆங்கிலத்தை ஆதரித்தார் என்பதற்கு ஏராளமான சான்றுகள் முன் வைக்கப்பட் டிருக்கின்றன.

தமிழ் இலக்கியங்களோடும், தமிழ்ப் புலவர் களோடும் பெரியார் கொண்டிருந்த உடன்பாடு களையும் முரண்பாடுகளையும் ஏழாவது அத்தியாயம் ஆராய்கிறது. தொல்காப்பியம், இராமாயணம், கந்தபுராணம், சிலப்பதிகாரம் மற்றும் அகத்தியர், பரிமேலழகர், பாரதி குறித்து பெரியார் பார்வையை முன்னிறுத்துவதோடு “தமிழ்ப் புலவர்கள் தமிழைச் சாகாமல் காப்பாற்றும் பணியில் இனி இருப்பதை விட தமிழை வளர்க்கும் தொண்டில் ஈடுபடுதல் வேண்டும்” என்றே புலவர்களை வலியுறுத்தினார்.

தமிழ் இலக்கியத்தில் ஆரியக் கருத்துகள் நுழைக்கப்பட்ட வரலாறு, மிகச் சிறப்பாக விளக்கப்பட்டுள்ளது. தமிழ் இலக்கியங்கள் மீது பெரியார் வைத்த விமர்சனத்தை பாவலரேறு பெருஞ்சித்திரனார் முழுமையாக ஏற்றுக் கொண்டதை அவரது கருத்துகளிலிருந்தே மேற்கோள் காட்டி விளக்கப்பட்டுள்ளது.

‘தமிழன்’ என்றதலைப்பிலான அய்ந்தாவது அத்தியாயம் - ‘திராவிடம்’ என்ற பார்ப்பன எதிர்ப்புக் குறிப்புச் சொல்லை ஏற்றாலும் பெரியார், தனது எழுத்து பேச்சில் ‘தமிழன்’ என்றே குறிப்பிட்டதை ஏராளமான சான்றுகளுடன் நிறுவியிருக்கிறது. **பெரியாரின் 229 மேற்கோள்கள் பட்டியலிடப் பட்டுள்ளன.**

‘திராவிட - தமிழ் இரண்டும் ஒன்று தான்’ என்ற அத்தியாயம், பெரியாரின் குரல் தமிழருக்காகவே ஒலித்தது மட்டுமல்ல; மலையாளிகள், கன்னடர், ஆந்திரர் ஆதிக்கத்தையும் வன்மையாகக் கண்டித்ததை விளக்குகிறது.

(தொடரும்)

## மாட்டிக்கிட்டாரு; அய்யரு மாட்டிக்கிட்டாரு : வி.பி.சிங் மீண்டும் பாடச் சொன்ன தலித் சுப்பையா பாட்டு



*‘மாட்டிக்கிட்டாரு, அய்யரு மாட்டிக்கிட்டாரு’ என்ற பாடலை காஞ்சி ஜெயேந்திரன், சங்கர்ராமன் கொலை வழக்கில் கைது செய்யப்பட்டதையொட்டி தலித் சுப்பையா எழுதினார். இந்தப் பாடல் பிறந்த வரலாற்றை அவரது குழுவில் இடம் பெற்றிருந்த கார்த்திக் சென்னையில் நடந்த படத்திறப்பு நிகழ்வில் விளக்கினார்.*

*“2004ஆம் ஆண்டு எங்கள் குழு டெல்லிக்குப் பயணமானது. புதிய தமிழகம் கட்சித் தலைவர் டாக்டர் கிருஷ்ணசாமி, அப்போது டெல்லியில் இரட்டை வாக்குரிமை, தனியார் துறை இடஒதுக்கீடு சுய நிர்ணய உரிமைகள் ஆகிய கோரிக்கைகளை வலியுறுத்தி, 3 நாள் மாநாடு நடத்தினார். அம்மாநாட்டுக்கு நாங்கள் நிகழ்ச்சி நடத்தப் போனோம். பயணத்தில் சங்கராச்சாரி கைது பற்றிய செய்தி கிடைத்தது. உடனே இந்த ஜெயேந்திரனுக்கு ஒரு பாடல் எழுத வேண்டுமே என்று சுப்பையா கூறினார். அது குறித்து சிந்தனையில் மூழ்கினார். டெல்லிக்குப் போனவுடன் ஓர் இரவு முழுதும் கண் விழித்து, ‘மாட்டிகிட்டாரு; அய்யர் மாட்டிகிட்டாரு’ என்ற பாடலை எழுதி மெட்டும் போட்டார். அடுத்த நாள் மாநாட்டு நிகழ்ச்சியில் அப்பாடலைப் பாடியபோது அரங்கம் அதிரும் அளவுக்கு கைதட்டல். மாநாட்டைத் திறந்து வைக்க வந்த வி.பி. சிங், கரவொலியைக் கேட்டு எதற்காகக் கை தட்டுகிறார்கள் என்று விசாரித்தார். ஆங்கிலத்தில் சங்கராச்சாரி கைது – கைதின் பின்னணி அவரிடம் விளக்கப்பட்டவுடன், மிகவும் உற்சாகமடைந்த வி.பி. சிங், மீண்டும் ஒரு முறை பாடச் சொன்னார். அப்போதும் கை தட்டல். பாடலைப் பாராட்டி ரூ.5000/- நிதியை குழுவினருக்கு வழங்கினார். தொடர்ந்து பல தலித் தலைவர்கள் பாடலை வரவேற்று மேடையில் நிதி வழங்கினார். அடுத்த நாள் மாநாட்டிலும் அதே பாடல்களைப் பாடச் சொன்னார்கள்! என்று கார்த்திக் விளக்கினார்.*

DATE OF PUBLICATION - EVERY THURSDAY TAMIL WEEKLY REG.NO.TN/CC(S)DN/459/22-24 LICENCED TO POST WPP NO.TN/PMG(CCR)/WPP-462/22-24
PURATCHI PERIYAR MUZHAKKAM REGISTERED WITH THE REGISTRAR OF NEWSPAPER FOR INDIA UNDER NO.TNTAM/2002/07776

# நீட் : ஆளுநர் கூறும் வாதங்கள் சரியா?

*ஆளுநர் நீட் தேர்வு விலக்கு மசோதாவை திருப்பி அனுப்பிட குறிப்பிட்டிருந்த இரண்டு காரணங்கள், ஒன்று - மசோதா மாணவர்களின் நலனுக்கு எதிராக இருக்கிறது; இரண்டு - 'நீட்' தேர்வு ஏழை மாணவர்களின் மீதான பொருளாதாரச் சுரண்டலைத் தடுக்கிறது. நீதிமன்ற தீர்ப்புக்கு எதிரானது.*

*இந்த காரணங்களுமே நகைப்புக்குரியது மட்டுமல்ல, 'நீட்' தேர்வு குறித்த புரிதல் இன்மையை வெளிக் காட்டுகிறது சட்டம் இயற்றும் அதிகாரம் சட்டமன்றத்துக்கும் உண்டு.*

*மாணவி அனிதா முதல் 'நீட்' தேர்வு காரணமாக தங்களை மாய்த்துக் கொண்ட பலரும் சமூகத்தின் ஏழ்மை நிலையில் உள்ளவர்கள்தாம். அவர்கள் பன்னிரெண்டாம் வகுப்பில் அதிக மதிப்பெண் எடுத்து, 'நீட்' தேர்வுக்கான பயிற்சியை பல லட்சம் கொடுத்து பயிற்சி பெற முடியாமல் வாய்ப்பை இழந்துள்ளனர்.*

*இதைத்தான் உயர்நீதிமன்ற ஓய்வு பெற்ற நீதிபதி டாக்டர் ஏ.கே.ராஜன் குழு புள்ளி விவரங்களுடன் எடுத்துக் காட்டியுள்ளது.*

*ஏன், தற்போது வெளிவந்துள்ள மருத்துவ இளங்கலை படிப்பு முடித்து (எம்.பி.பி.எஸ்.)க்கான கலந்தாய்வு சில விவரங்களை வெட்டவெளிச்சமாக நமக்குத் தருகிறது. இவ்வாண்டு நிலை என்ன?*

*மொத்த இடங்கள்: 6999 இடங்கள் - அரசு கல்லூரிகள்: 4349 இடங்கள் - நிகர்நிலைப் பல்கலைக் கழகங்கள்: 2650 இடங்கள்.*

*சி.பி.எஸ்.இ. மாணவர்களின் ஆதிக்கம் தரவரிசைப் பட்டியல்: முதல் 10 ரேங்கில், சி.பி.எஸ்.இ. மாணவர்கள் 8; மாநில பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள் 2.*

*முதல் 100 ரேங்கில் : சி.பி.எஸ்.இ. மாணவர்கள் 81; மாநில பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள் 17.*

*முதல் 1000 ரேங்கில் : மாநில பாடத் திட்டத்தில் படித்த 394 மாணவர்கள் மட்டுமே தேர்வு.*

*நீட் தேர்விற்குமுன் : சி.பி.எஸ்.இ. வாரியத்தில் இருந்து ஒரு சதவிகிதம் (1%) மட்டுமே மருத்துவப் படிப்பில் சேர முடிந்தது. இப்போது அது 39 சதவிகிதமாக (39%) ஆகிவிட்டது! என்னே கொடுமை!*

*நீட்தேர்வுக்குமுன் : மாநில பாடத் திட்டத்தில் படித்த 98.2 சதவிகித மாணவர்கள் எம்.பி.பி.எஸ். படிப்பில் சேர முடிந்தது. தற்போது அது 59 சதவிகிதமாக குறைந்துள்ளது.*

*'நீட்8 தேர்வுக்குமுன், : கிட்டத்தட்ட 14.8 சதவிகிதம் தமிழ் வழி மாணவர்கள், எம்.பி.பி.எஸ். படிப்பில் சேர்ந்தனர். ஆனால், தற்போது அது 2 சதவிகிதத்திற்கும் கீழே குறைந்துள்ளது.*

*'நீட்' தேர்வு சிபிஎஸ்இ. மாணவர்களுக்கும், வசதிபடைத்த குடும்பத்தினருக்கும் மட்டுமே ஆதரவாக உள்ளது.*

*யார் யாருக்கு இடம் கிடைத்துள்ளது?*

*ஆங்கில 'இந்து' பத்திரிகையில் நேற்று (6.2.2022) வந்துள்ள 'நீட்' தேர்வு குறித்த கட்டுரையிலும், பிளஸ் 2 இல் 1137 மதிப்பெண் பெற்ற நட்சத்திர ப்ரியா, 2017 இல் 'நீட்' எழுதத் தொடங்கி, மூன்று ஆண்டுகால முயற்சிக்குப் பின், 7.5 சதவிகித ஒதுக்கீட்டின் காரணமாக நெல்லை மருத்துவக் கல்லூரியில் இடம் கிடைத்திருக்கிறது.*

*மூன்று ஆண்டுகாலம் வீண் அல்லவா? பிளஸ் 2 அடிப்படையிலேயே இருந்திருந்தால் இந்நிலை ஏற்பட்டிருக்குமா?*

*தகுதிப் பட்டியலில் 9976 பேர் மட்டுமே இவ்வாண்டு தேர்வெழுதியோர். 14,973 பேர் திரும்ப எழுதியவர்கள் (ரிப்பீட்டர்ஸ்). அதாவது, 2, 3, 4 ஆண்டுகள் கோச்சிங் சென்று விடாது படையெடுப்போர்.*

*வசதி, வாய்ப்பு உள்ளவர்களால் மட்டுமே பல லட்சங்கள் செலவு செய்து, ஒரே தேர்வை ஈராண்டு, மூவாண்டு எழுத செலவிடவும் முடியும். குடும்பச் சூழலும் அதை அனுமதிக்கும். சேர்க்கை முடிவில் இன்னும் தெளிவு பிறக்கும்.*

*மறுமுறை தேர்வு எழுதுவோரும், நடப்பாண்டு படிப்பை முடித்துவரும் புதியவர்களும், ஒரே தேர்வை எழுதினால் யாருக்குசாதகமாக அத்தேர்வு அமையும் என்பது வெளிப்படை. அதுதான் 'நீட்' தேர்வில் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.*

*'நீட்' தேர்வு, சி.பி.எஸ்.இ. பாடத் திட்டத்தில் படித்த மாணவர்களுக்கும், தேர்வை பலமுறை எழுதவும், கோச்சிங்மூலம் பல லட்சம் ரூபாய் செலவு செய்ய வாய்ப்பும் உள்ளவர்களுக்கு மட்டுமே சாதகமாக இருக்கிறது. நடப்பு ஆண்டிலும் அதே நிலைதான்.*

*தேர்வு மார்க்குகள் - திறமை (Merits) திறனறிவின் உண்மை அளவுகோல் ஆகாது என்ற உச்சநீதிமன்றத்தின் அண்மைத் தீர்ப்பில் இரு நீதிபதிகளின் தீர்ப்புப்படியே, 'நீட்' தேர்வு ஏற்கத் தக்கதா?*

*12 ஆண்டுகள் படித்த படிப்பில் பெற்ற மதிப்பெண்களைக் குப்பைக்கூடையில் தூக்கியெறிந்து, குறிப்பிட்ட பாடத் திட்டத்தில் (சி.பி.எஸ்.இ.) படித்த மேட்டுக் குடி மாணவர்களுக்குச் சாதகமாக நடத்தும் தேர்வுதான் தகுதி- திறமைக்கு அடையாளமா? அளவுகோலா? பணம் படைத்தவர்களுக்குத் தான் படிப்பா?*

*'நீட்'டுக்குமுன் ஒரு சதவிகிதம் இடம்பெற்ற சி.பி.எஸ்.இ. பாடத் திட்டத்தில் படித்த மாணவர்கள், மருத்துவக் கல்லூரிகளில், 'நீட்'டுக்குப் பிறகு 39 சதவிகித இடத்தைப் பிடித்துள்ளனர் என்றால், 'நீட்' யாருக்கு சாதகம்? யாருக்குப் பாதகம்? என்பதைத் தெரிந்துகொள்ளலாமே!*

*(திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி. வீரமணி அறிக்கையிலிருந்து)*

*(முதல் பக்கத் தொடர்ச்சி)*

*நடந்த ஒரு விழாவில் பண்ணமைத்துப் பாடினோம். லெனின் ஒரு முறை கூறினார், உலகம் முழுதும் தங்கம் தான் சக்தி வாய்ந்த செலாவணியாக இருக்கிறது.*

*• உலகம் தழுவிய ஒரு சோஷலிச சமுதாயம் உருவாகும் போது, நகரங்களில் கழிவறைகளைக் கட்டி, அதில் இந்தத் தங்கத்தைத் தளமாகப் போடுவோம் என்றார் லெனின். பகுத்தறிவாளர்களாகிய நாம், பகுத்தறிவு அரசு ஒன்று அமைகிற போது, கோயில்களை எல்லாம் இடித்துத் தள்ளி விட்டு அங்கு கழிவறைகளைக் கட்டுவோம்,*

*"வீட்டுக்கொரு பூசை அறை;*
*வீதியெங்கும் கோயில்களாம்;*
*தமிழர்கள் பூசாரிகளாய்*
*மாறியதேனோ!"*

*• தோழர்களே! பெரம்பலூரில் நடந்த ஒரு பெரும் கூட்டத்தில் நான் என்னை மறந்து பெரியாரைப் பற்றிப் பாடிக் கொண்டிருந்தேன். எங்கள் இசைக்குழுவில் இடம் பெற்றுள்ள, தோழர்கள் அலெக்ஸ், பாக்கியநாதன் இருவரும், பெரியாரைப் பற்றிய பாடலை நாம் பாடாத மேடை இருக்கவே கூடாது என்பார்கள். அப்படி நான் பாடிக் கொண்டிருந்த போது, ஒருவர் மேடைக்கு வந்து பெரியாரைப் பற்றிப் பாடாதே என்றார். ஏன்? அவர் ஒட்டுமொத்த தமிழ்ச் சமுதாயத்தின் தலைவரல்லவா? என்றேன்.*

*அவர், 'இல்லை, அவர் பிற்படுத்தப் பட்டோரின் தலைவர். நமக்கான தலைவர் இல்லை' என்றார். நான் எவ்வளவோ வாதாடியும் பயனில்லை. கடைசியில் பாட்டை பாதியில் நிறுத்த வேண்டியதாயிற்று. அதற்குப் பிறகு என்னுடைய பாடல் ஒன்வொன்றிலுமே பெரியாரை இடம் பெறச் செய்தேன். பாடல் வரிகளின் இடையிலே பெரியாரைச் சொருகி விடுவேன். அப்போது அவர்கள் பாடலை நிறுத்தச் சொல்ல முடியாது அல்லவா?*

*• தோழர்களே! சங்கராச்சாரிகளிலே பல 'கிரேடுகள்' இருக்கிறார்கள். 'தீக்குறளை சென்றோதோம்' என்று திருப்பாவையில் ஆண்டாள் பாடுவதற்கு, ஒரு செத்துப் போன சங்கராச்சாரி என்ன விளக்கம் தந்தார் தெரியுமா? 'தீமையைப் பயக்கும் திருக்குறளைப் படிக்கக் கூடாது' என்று விளக்கம் கூறி, தமிழர் மறையான திருக்குறளையே இழிவு படுத்தினார். அதற்கெல்லாம் சேர்த்துத்தான், இப்போது ஒட்டு மொத்தமாக 'ஆப்புவச்சு' அடிச்சிருக்காங்க. யார் யாருக்கு இவர்கள் எல்லாம் 'ஆசி' வழங்கிக் கொண்டிருந் தார்களோ அவர்களிடம் போய் கைகட்டிக் கொண்டு நிற்கிறார்கள். இதற்கெல்லாம் விதை போட்டவர் யார்? இந்த விழிப்புணர்வுக்கு அடித்தள மிட்டவர் யார்? பெரியார் அல்லவா?*

*• தோழர்களே! நான் போட்டோ எடுக்காத குடும்பத்தில் பிறந்தவன். என்னுடைய வீட்டில் எனது தாய் தந்தை போட்டோ கூட இல்லை. எனது வீட்டில் இரண்டு சிலைகள் மட்டுமே இருக்கின்றன. இரண்டும் பெரியார் சிலைகள். அதில் ஒன்று பத்து ஆண்டுகளுக்கு முன்பு புதுச்சேரியில் தோழர் கோவை இராம கிருட்டிணன் எனக்கு அன்பளிப்பாக வழங்கியது. மற்றொன்று, எனது திருமணத்துக்கு நண்பர் ஒருவர் அன்பளிப்பாக வழங்கியது. இந்த இரண்டு சிலைகளையும், எனது பிள்ளைகள், ஒவ்வொரு நாளும் வணங்கிவிட்டுத் தான் பள்ளிக்குச் செல்கிறார்கள். பெரியார் எனக்கு என்ன மாட்டு 'லோன்' வாங்கிக் கொடுத்தாரா? ஆட்டு 'லோன்' வாங்கிக் கொடுத் தாரா? வங்கிக் கடன் வாங்கிக் கொடுத்தாரா? பட்டம் வாங்கிக் கொடுத்தாரா? பெரியார் தாழ்த்தப் பட்டவர்களுக்கு எதையும் செய்யவில்லை என்று சிலர் சொல் கிறார்கள்.*

*ஆனால் என்ன செய்யவேண்டும் என்று சொல்லவில்லை. ஏன் சொல்ல வில்லை? மாபெரும் மனிதர்கள் வரலாற்றின் போக்கைத் திருப்புவார்கள். துக்கடா அரசியல்வாதிகளைப் போல், மாட்டு லோன் வாங்கித் தரலை; ஆட்டு லோன் வாங்கித் தரலை; என்று இப்படியா பேசுவது? மார்க்ஸ் யாருக்கு ஆட்டு 'லோன்'; மாட்டு 'லோன்'; ரேஷன் கார்டு வாங்கிக் கொடுத்தாரு? அவர் வரலாற்றின் போக்கை மாற்றியவர். அதுபோல், தமிழ்ச் சமுதாயத்தின் வரலாற்றின் போக்கை மாற்றியவர் பெரியார்; அப்படித்தான் பார்க்க வேண்டும்!*

*• "இந்து மதம் எனக்குப் பிடிக்காத மதம். அதன் அயோக்கியத்தனத்தை நான் விரும்புவதில்லை" என்றார் டாக்டர் அம்பேத்கர். அதனால் தான் மதம் மாறச் சொன்னார். மதம் மாறுவதால் என்ன பலன் என்று அம்பேத்கரிடம் கேட்டார்கள். இந்திய சுதந்திரத்தால் எங்களுக்கு என்ன பலன் என்று கேட்டார் டாக்டர் அம்பேத்கர். பெரியாரும் அம்பேத்கரும் இந்துத்துவத்தை எதிர்த்து அடித்த அடியால்தான் அது பலவீனமானது. நாம் நிமிர்ந்து நிற்கிறோம்.*

*• தோழர்களே! ஒடுக்கும் ஆளும் வர்க்கமே வெளியேறு என்ற முழக்கத்தை நாம் முன் வைக்க வேண்டும். வரலாற்றில் ஒவ்வொரு தேசிய இனமும், இந்த முழக்கத்தைத் தான் முன் வைத்திருக்கிறது. தந்தை பெரியார் திராவிடர் கழகமும் அதைத் தான் முன் வைக்கிறது. பெரியார் என்ற மாமனிதர் நிழலில் நாம் நின்று கொண்டிருக்கிறோம். அவர் விதைத்த விதைகளினால் தான், நாம் இன்று அதிகாரிகளாக, டாக்டர்களாக, வழக்கறிஞர்களாக வர முடிந்திருக்கிறது. 50 ஆண்டுகளுக்கு முன் இந்தத் துறைகளில் எல்லாம் பார்ப்பனர்கள் தான் கொடிகட்டிப் பறந்தார்கள். இந்த மாற்றத்துக்கு யார் காரணம்? தந்தை பெரியார்! அவர் அழகிய முகத்தைப் பாருங்கள்; அதில் தமிழகம் தெரி கிறது."*

*• தோழர்களே! அம்பேத்கர் சென்னை வந்தபோது, தாழ்த்தப்பட்ட சமுதாயத்து அரசு ஊழியர்கள் அவரை சந்தித்து, தங்களுக்குத் தலைமை ஏற்று வழி நடத்த வேண்டும் என்று கேட்டார்கள். அதற்கு அம்பேத்கர், "இங்கே தமிழ் நாட்டிலேயே உங்களுக்காகப் போராடுகிற தலைவர் இருக்கிறார் தெரியுமா? அவர்தான் ஈ.வெ.ராமசாமி. அவர் தலைமையில் செயல்படுங்கள்" என்று கூறுகிறார். இந்த வரலாறைத் தெரியாதவர்கள் பெரியாரை இன்று குறை கூறுகிறார்கள்.*

**தொகுப்பு : விடுதலை இராசேந்திரன்**

**பெரியார் முழக்கம் 27102005 இதழ்**

*(இந்தத் தொகுப்பைப் படித்து விட்டு இந்த வரலாறுகளை எதிர்காலத் தலைமுறையினருக்கு பதிவுகளாக மாற்றிய 'புரட்சிப் பெரியார் முழக்க'த்தைப் பாராட்டி, தோழர் தலித் சுப்பையா கடிதம் எழுதினார். 10.11.2005 இதழில் அது வெளியிடப்பட்டது)*

Tamil Weekly
Posted at : Pathrika Channel, Egmore RMS under WPP Posted: 24th February 2022

OWNER AND PUBLISHER BY : K. RAJENDRAN, FROM 29, JOURNALISTS COLONY, THIRUVALLUVAR NAGAR, THIRUVANMIYUR, CHENNAI - 600 041.
AND PRINTED BY : S. THEESMAS, AT LILLY SOOSAI OFFSET, NEW NO.8, OLD NO.12/1, MOHAMMED USAIN LANE, ROYAPETTAH, CHENNAI - 600 014.
EDITOR ; K. RAJENDRAN